**ஊழியர் சேமலாப நிதியம் - 2012**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பிரிவின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் 03 ஆண்டுகளுக்கோ அல்லது 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மீள்பெறுமதியிடப்பட வேண்டிய போதிலும் நிதியத்தின் முற்றாகப் பெறுமானத் தேய்விடப்பட்டு பூர்த்திசெய்யப்பட்ட எனினும் தொடர்ந்தும் பயன்பாட்டிலுள்ள ரூபா 76,656,104 கிரயமான நிலையான சொத்துக்கள் அவ்வாறு மீள்பெறுமதியிடலுக்கு உட்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் 58 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் சொத்துக்கள் முதலீடாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட்ட கம்பனிகளின் முதலீடு தொடர்பாக மீளாய்வாண்டின் போது இடர் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதற்காக போதிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

எவ்வாறெனினும், 2013 ஆம் ஆண்டின் இறுதியில் இடர் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதற்காக அளவுகோலாக பங்குச் சந்தைவிலை, கிரயத்தில் 20 சதவீதத்திற்கும் குறைவான அல்லது 20 ஆண்டுகளுக்கு மேற்பட்டவையும் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. இக் கொள்கையில் மேற்கொள்ளப்பட்ட

மதிப்பீட்டின் போது 2 கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்ட பங்குகளில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சந்தைப் பெறுமதி முறையே ரூபா 189,944,490 ஆகவும் ரூபா 6,794,537 தொகையாகவும் காணப்பட்டதுடன் அதன் கிரயமான ரூபா 1,005,584,993 உடனும் ரூபா 43,925,523 உடனும் ஒப்பிடப்படுகையில் முறையே ரூபா 815,640,503 ஆலும் ரூபா 37,130,986 ஆலும் அதாவது 18.9 சதவீதத்தாலும் 15.5 சதவீதத்தாலும் பாதிப்பை விளைவிக்கும் நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மீண்டெழும் செலவினமாக செலவிடப்பட்ட ரூபா 56,916,275 தொகையான நிலையான சொத்துக்கள் கொள்வனவு மற்றும் கணனி உதிரிப்பாகங்களின் கொள்வனவின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இதில் வாகன பழுதுபார்த்தல் மற்றும் இயந்திர சாதனங்களைப் பழுதுபார்த்தல் செலவினங்கள், ஆலோசனைக் கட்டணங்கள், ஏபீஎச் கணனிமயமாக்கல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பத்திரிகை விளம்பரக் கட்டணங்கள், கை அடையாள செயற்திட்டம் மற்றும் அரச தொழிற்சாலைகள் திணைக்களத்திற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 1.2.3 தீர்த்து வைக்கப்படாத மீதி

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) தொழில் ஆணையாளர் நாயகத்தால் ஊழியர் சேமலாப நிதியத்திற்காக தொடரப்பட்ட வழக்குகள் மூலமும் நிலுவையாக உள்ள தவணைப் பணமாக அறவிடப்பட்ட 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒவ்வொரு அங்கத்தவரதும் கணக்கில் செலவு வைக்கப்படாத மீதி ரூபா 5,409,262,080 ஆகக் காணப்பட்டது.

*முறைப்படி ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்புச் செலுத்தாத தொழில் வழங்குனர்களுக்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு நீதிமன்ற தீர்வில் தவணை முறையில் அறவிடப்பட்ட நிதி மற்றும் தொழில் உத்தியோகத்தர்கள் தலையிட்டு அறவிடப்பட்ட பணத்தைக் கொண்ட இம் மீதி, தவணைப்பணம் முற்றாக செலுத்தப்பட்டு பூர்த்திசெய்யப்பட்ட தொடர் அடிப்படையில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக இலங்கை மத்திய வங்கியின் கருத்தாகக் காணப்பட்டது.*

(ஆ) ஊழியர் சேமலாப நிதியமாக ஊழியர்களது கணக்குகளில் செலவு வைக்கப்பட்டுத் தீர்த்து வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறிருந்த மீதி ரூபா 341,677,762 ஆகும்.

(இ) நிதியத்தின் ஆரம்பம் முதல் அதிகரித்தவாறிருந்ததும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 1,425,783,355 ஆன குறைமிகைப் பங்களிப்புத் தொகைக் கணக்கு மீதி தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

ஊழியர் சேமலாப நிதியத்தின் தொழில் திணைக்களத்திற்குரிய ரூபா 1,138,938,751 இற்கான நிலையான சொத்துக்களின் நிலைத்திரு தன்மை, பெறுமதி மற்றும் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கான நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் விபரமான பட்டோலைகள் மற்றும் நிலையான சொத்து மெய்மையாய்வு அறிக்கைகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகளின் தேறிய விளைவு வருமான வரிக்குப் பின்னர் 111,828,720,197 மிகையாக அமைந்ததுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் தேறிய மிகை ரூபா 107,202,066,499 ஆகும். அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் தேறிய மிகையில் ரூபா 4,626,653,698 அதிகரிப்பு காணப்பட்டது. முதலீட்டு வருமானம் ரூபா 5,537,659,176 ஆலான அதிகரிப்பு நிதிசார் விளைவுகளில் அதிகரிப்பிற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

**2.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய பங்களிப்புத் தொகையும் மிகையறவீடு பின்வருமாறு அறவிடப்பட்டிருக்கவில்லை.

- இலங்கை மத்திய வங்கியின் தரவு அடிப்படையின் பிரகாரம் நிதியத்தில் பதிவாகியுள்ள 396 நிறுவனங்களில் 2009 – 2012 காலப்பகுதிக்காக

அறவிடப்பட வேண்டிய ரூபா 101,140,260 தொகையான மிகையறவீடு 2014 ஏப்ரல் 30 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

- கொழும்பு கிழக்கு, மாவட்ட தொழில் அலுவலகத்திற்குரிய செயற்பாட்டில் உள்ள தொழில் வழங்கும் 148 நிறுவனங்களிற்குரிய ரூபா 175,449,814 நிலுவையான பங்களிப்புத் தொகையையும் மிகையறவீட்டுத் தொகையையும் அறவிடுவதற்கு 2014 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2000 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையான காலப்பகுதிக்குரிய 169 உள்ளூராட்சி நிறுவனங்களில் இருந்து ரூபா 14,379,993 தொகையான ஊழியர் சேமலாப நிதியத்தின் தாமதமான மிகையறவீட்டுத் தொகையை அறவிடுவதற்காக முறையான வகையில் அறிவித்தல்கள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

- கம்பஹா மாவட்ட தொழில் அலுவலகத்திற்குரிய செயற்பாட்டில் உள்ள தொழில் வழங்கும் 297 நிறுவனங்களில் இருந்து 2009 ஆம் ஆண்டு முதல் 2013 சனவரி வரையான காலப்பகுதிக்கு உரித்தான ரூபா 145,268,636 தொகையான ஊழியர் சேமலாப நிதியத்தின் நிலுவையான பங்களிப்புத் தொகையும் மிகையறவீடும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

- அவிசாவளை மாவட்ட தொழில் அலுவலகத்திற்குரிய செயற்பாட்டில் உள்ள தொழில் வழங்கும் 205 நிறுவனங்களில் இருந்து 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டின் இறுதி வரையான காலப்பகுதிக்கு உரித்தான ரூபா 184,570,423 தொகையான ஊழியர் சேமலாப நிதியத்தின் நிலுவையான பங்களிப்புத் தொகையும் மிகையறவீடும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

- இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய 22 பிராந்திய அலுவலகங்களுக்கு உரித்தான ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 498,374,779 தொகையான பங்களிப்புத் தொகையும் மிகையறவீடும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையான ஊழியர் சேமலாப நிதியத்தை அறவிடுவதற்காக நாடெங்கிலும் 10,641 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் அவ்வழக்குகளுடன் தொடர்புடைய தொகை ரூபா

8,244,403,544 ஆகக் காணப்பட்டது. இவ் வழக்குகளில் எவ்வளவு தொகை அறவிடப்படும் என்பது பற்றியோ அல்லது எந்த அளவு எண்ணிக்கையான வழக்குகள் தீர்க்கப்படும் என்பது பற்றிய தகவல்கள் ஊழியர் சேமலாப நிதியத்தில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கண்டி வடக்கு மாவட்டத் தொழில் அலுவலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குரிய 22 கம்பனிகளிலிருந்து 2007 சனவரி 01 ஆம் திகதி முதல் 2009 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்குரிய ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய எனினும் நிதியத்திற்குச் செலுத்தப்படாதுள்ள நிலுவைப் பங்களிப்புத் தொகையான ரூபா 30,226,443 தொகையும் இதற்கான மிகையறவீட்டுப் பணமான ரூபா 13,786,734 தொகையும் நிலவியது. இதற்கு மேலாக இத் தோட்டக் கம்பனிகள் 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்புத் தொகையைச் செலுத்தியிருக்கவில்லை.

*2010 ஆம் ஆண்டு முதல் 2013 யூன் 30 ஆம் திகதியில் முடிவுற்ற காலப்பகுதிக்காக அரச பெருந்தோட்டக் கம்பனிகள் 31 இலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 208,378,193 தொகையை அறவிடுவதற்கான வழக்குத் தொடரப்படுவதற்கும் எதிர்வரும் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தொழில் ஆணையாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.*

(ஈ) கண்டி தெற்கு மாவட்டத் தொழில் அலுவலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்திற்குரிய 14 மக்கள் தோட்டக் கம்பனிகளிலிருந்து 2003 ஆம் ஆண்டு முதல் 2006 வரையான காலப்பகுதிக்கு உரித்தான ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பங்களிப்புத் தொகையும் மிகையவீட்டுத் தொகையின் மொத்தப் பெறுமதி ரூபா 42,066,439 ஆகக் காணப்பட்டது. இத் தோட்டக் கம்பனிகள் 2007 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செலுத்தியிருக்கவில்லை.

*2003 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை 15 தோட்டக் கம்பனிகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 171,734,992 தொகையை அறவிடுவதற்கு 26 சந்தர்ப்பங்களின் போது வழக்குத் தொடரப்பட்டதாகவும் 108 சந்தர்ப்பங்களின் போது பணம் அறவிடப்படுவதற்கு வழக்குத் தொடர்வதற்கான*

*நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தொழில் ஆணையாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.*

(உ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிமை கோரப்படாத நலன் கணக்கிலும் பிடித்து வைக்கப்பட்ட நலன் கணக்கின் மீதியான முறையே ரூபா 125,325,963 இனையும் ரூபா 34,138,653 இனையும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,093,000 பெறுமதியான மூலதனப் பொருட்கள் தொழில் திணைக்களத்தின் இருப்புப் புத்தகங்களில் பதியப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்தின் இலங்கை மத்திய வங்கி உத்தியோகத்தர்களின் ஊழிய வருமானத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 6,459,092 உழைக்கும் போதே செலுத்தும் வரி குறித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாது ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**3.1.1 செயற்பாட்டுச் செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் இறுதியில் நிலவிய செயலாற்றல் நிலைமை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| விபரம் | உள்ளபடியான எண்ணிக்கை | நிதிய நடவடிக்கைகளுக்கு உரிய எண்ணிக்கை | அதன் சதவீதம் |
|---|---|---|---|
| தனியார் மற்றும் பகுதியளவு பொதுத்துறை நிறுவன ஊழியர்கள் | 3,832,840 | 2,250,000 | 58.70 |
| தொழில் வழங்குவோர் | 227,612 | 68,771 | 30.21 |

| | | | |
|---|---|---|---|
| நிதியத்தின் அங்கத்தவர்களது கணக்குகளின் எண்ணிக்கை (மில்லியன்) | 14.25 | 2.25 | 15.79 |

(மூலம்: இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2012)

தற்போது பங்களித்த தொகைகளை அனுப்பி வைக்காதுள்ள நிதியத்தின் 12,000,000 அங்கத்தவர் கணக்குகளிற்கு (செயற்பாடற்ற கணக்குகள்) 2012 சனவரி 01 ஆந் திகதி வரை செலவு வைக்கப்பட்டுள்ள தொகை ரூபா 497,306,421,269 ஆகவும் அக் கணக்கின் உரிமையாளர்களிற்கு 2012 ஆண்டிற்காக செலவு வைக்கப்பட்டிருந்த வட்டித் தொகை ரூபா 57,190,238,790 ஆகவும் காணப்பட்டது.

**(ஆ) அங்கத்தவர்களுக்கான நலன்கள்**

2007 முதல் 2012 ஆம் ஆண்டு வரை அங்கத்தவர்களிற்குச் செலுத்தப்பட்டிருந்த நலன்களின் சதவீதம் தொடர்பான விபரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 |
|---|---|---|---|---|---|---|
| வழங்கப்பட்ட நலன் சதவீதத்தில் | 11.5 | 11.5 | 12.5 | 13.75 | 13.2 | 11.2 |

2011 ஆம் ஆண்டில் 11.5 சதவீதப்படி அங்கத்தவர் நலன்களைச் செலுத்துவதற்காக ரூபா 101,284,166,436 பயன்படுத்தியிருப்பினும் மீளாய்வாண்டில் அதே சதவீதத்தில் அங்கத்தவர் நலன்களைச் செலுத்துவதற்காக ரூபா 115,771,416,227 தொகை தேவைப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் வருமான அதிகரிப்பு ரூபா 4,626,653,698 ஆக மாத்திரம் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டில் செலுத்தப்பட்ட 11.5 சதவீத பங்கிலாப அளவினைச் செலுத்துவதற்காக ரூபா 5,700,000,000 பங்கிலாப சமப்படுத்தும் ஒதுக்கத்திலிருந்து வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2012 இன் 02 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய (திருத்த) அதிகாரச் சட்டத்தினால் பிரதான அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவிற்குப் பதிலாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட 23(அ) பிரிவின் பிரகாரம் அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாடுகளை பூரணப்படுத்தும் அங்கத்தவர்களிற்கு தமது அங்கத்துவப் பணமாக செலவு வைக்கப்பட்டுள்ள தொகையில் 30 சதவீதத்தினை வீடமைப்பு மற்றும் மருத்துவ நலன்களாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அது இதுவரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

*2012 இன் 02 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்திற்குரிய பிரமாணங்கள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அது அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் குறித்த நலன்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று தொழில் ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.*

(ஈ) 1998 ஆம் ஆண்டு முதல் அரசாங்க வங்கிகள் மற்றும் அரசாங்கத்துடன் இணைந்த நியதிச்சட்ட நிறுவனங்கள் சிலவற்றினால் ஊழியர் சேமலாப நிதியத்திலுள்ள கணக்கு மீதியினை பிணையாக வைத்து வீடமைப்புக் கடனைப் பெற்றுக்கொள்ளும் முறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அக்கடன் திட்டத்தின் மூலம் 2000 – 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 192,232 கடன் சான்றிதழ்களின் ஊடாக ரூபா 40,871 மில்லியன் கடன் தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அக்காலப்பகுதியினுள் இக்கடன் தொகைகளிலிருந்து கடன் தவணைப்பணங்களைச் செலுத்தாது ஏய்ப்புச் செய்திருந்த அளவு ரூபா 14,559 மில்லியனாகும்.

### 3.1.2 முதலீடும் முதலீட்டு வருமானமும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதியம் பங்குச் சந்தையிலுள்ள 72 கம்பனிகளில் நெடுங்கால மற்றும் குறுகிய கால ரீதியில் மேற்கொண்டிருந்த ரூபா 63,102,761,384 ஒட்டுமொத்தமான முதலீடுகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 16 ஆந் திகதியளவில் ஊழியர் சேமலாப நிதியம் பங்குச் சந்தையில் மேற்கொண்டிருந்த நெடுங்கால மற்றும் குறுகிய கால முதலீடுகள் ரூபா 70,520,488,212 வரை அதிகரித்திருந்தது. அத்திகதியில் அம் முதலீடுகிளில் 64 கம்பனிகளில் மேற்கொண்டிருந்த ரூபா 50,700,023,800 முதலீடுகளின் பங்கு விலைகள் பங்குச் சந்தையில் ரூபா 14,410,838,379 ஆல் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் 22 கம்பனிகளில் பங்குகளில் மேற்கொண்டிருந்த ரூபா 17,821,779,895 தொகையான பங்குளின் பெறுமதி பங்குச் சந்தையில் ரூபா 4,015,715,500 ஆல் உயர்வடைந்திருந்தது. இருப்பினும், 2014 யூன் 10 ஆந் திகதியளவில் நிதியத்தின் ஒட்டுமொத்த பங்குச் சந்தை முதலீடுகள் 82 கம்பனிகளில் ரூபா 74,840,763,800 ஆக காணப்பட்டதுடன் இத்திகதியில் 48 கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த பங்குகளின் சந்தைப்

பெறுமதியிலேற்பட்ட குறைவு ரூபா 9,651,570,175 ஆகவும் 34 கம்பனிகளின் பங்குச் சந்தை பெறுமதி அதிகரிப்பு ரூபா 8,996,856,733 ஆக காணப்பட்டது.

(ஆ) 2010 ஜூலை மாதத்தில் வானூர்திக் கம்பனி ஒன்றின் 1,863,676 அலகுகளில் மேற்கொண்ட ரூபா 500,000,000 முதலீட்டிற்காகவும் 2011 பெப்ரவரி 23 தொடக்கம் 2011 நவம்பர் 01 வரையான காலப்பகுதியின் போது நிதிக் கம்பனியொன்றினது 5,091,200 பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக மேற்கொண்டிருந்த ரூபா 205,489,613 முதலீட்டிற்காகவும் 2010 மே 31 ஆந் திகதியளவில் ஹோட்டேல் கம்பனியொன்றின் 23,712,200 பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 810,321,611 முதலீட்டிற்காகவும் குறித்த முதலீடுகள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்தே எவ்வித வருமானமும் நிதியத்திற்குக் கிடைத்திருக்கவில்லை.

*நீண்டகாலத்தில் அதிக நலனைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த முதலீடுகள் தற்போது நட்டமீட்டும் நிலையிலிருந்து இலாபமீட்டும் நிலைக்கு மாறிச்செல்லும் காலகட்டத்தில் காணப்படுவதனால் அவ்வாறான முதலீடுகள் எதிர்காலத்தில் மிகவும் இலாபத்தன்மையான நிலைக்கு மாறுமென எதிர்பார்க்க முடியுமென்பது இலங்கை மத்திய வங்கியின் கருத்தாகும்.*

(இ) ரூபா 680,232,429 செலவழித்து தொடர்பாடல் கம்பனி ஒன்றில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 20,942,989 பங்குகளின் விலைகள், பங்குச் சந்தையில் அதிகரித்துச் சென்றிருந்த போதிலும், அப் பங்குகள் 2009 தொடக்கம் பங்குச் சந்தை கொடுக்கல் வாங்கல்களில் பயன்படுத்தப்படாமையால் அப்பங்குகளின் விற்பனையிலிருந்து மூலதன இலாபத்தை பெற்றுக்கொள்ள நிதியத்திற்கு முடியாது போயிருந்தது. இம் முதலீட்டிற்கு 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் நூற்றுக்கு 3.39 சதவீதப்படியும் 2010 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 0.81 மற்றும் 2011 ஆம் ஆண்டில் 1.67 மற்றும் 2012 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 2.62 சதவீதப்படியும் பங்கிலாப வருமானங்கள் கிடைத்திருந்த போதும், அவ் வருமானம் முதலீடு செய்த தொகையுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்த பெறுமதியில் காணப்பட்டது.

*இலங்கையின் பொருளாதார வளர்ச்சியுடன் தொடர்பாடல் துறை மேலும் விரிவடைந்து செல்வதால் எதிர்காலத்தில் இக் கம்பனியால் நிதியத்திற்குப் பெறப்படும் பங்கிலாபம் மற்றும் மூலதன இலாபம் என்பன உயர்ச்சியடையும் என இலங்கை மத்திய வங்கி கருதுகிறது.*

(ஈ) ஊழியர் சேமலாப நிதியத்தினால் 2008, 2009, 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 3,890,902,522 உம் ரூபா 6,877,822,908 உம் ரூபா 39,133,587,926 உம் ரூபா 73,948,947,927 மற்றும் ரூபா 63,102,761,384 எனப் பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. அம் முதலீடுகளுக்குப் பெறப்பட்ட வருமானம் 2008, 2009, 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முறையே 8.93 சதவீதமாகவும் 22.99, 5.08 சதவீதமாகவும் 3.58 சதவீதமாகவும் மற்றும் 3.77 சதவீதமாகவும் காணப்பட்டன.

(உ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, 14 கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 8,793,951,889 தொகையிலிருந்து நிதியத்திற்கு எதுவித வருமானமும் கிடைத்திருக்கவில்லை. இப் 14 கம்பனிகளில் அத்திகதியிலுள்ளவாறு 6 கம்பனிகளில் மாத்திரம் செய்யப்பட்டிருந்த முதலீடு ரூபா 7,358,547,720 ஆகும்.

*இப் 14 கம்பனிகளுக்குரிய மொத்தத் தொகையும் நீண்டகால நலன்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் முதலீடு செய்யப்பட்டுள்ளமையால் குறுங்காலத்தில் பெருமளவு நலன்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கம் இல்லை என்பதும் இது சாதாரண முதலீட்டுத் தொகுதியில் பின்பற்றப்படுகின்ற முறையாகும் என்பதும் இலங்கை மத்திய வங்கியின் கருத்தாகும்.*

(ஊ) ஊழியர் சேமலாப நிதியம் ரூபா 2,412,402,036 தொகையினை முதலீடு செய்திருந்த 5 கம்பனிகள் 2012/2013 ஆம் கணக்காண்டில் நட்டமீட்டியிருந்தன. மேற்குறிப்பிட்ட 05 கம்பனிகளில் 04 இல் ரூபா 2,206,912,423 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2011/2012 ஆம் கணக்காண்டிலும் நட்டமீட்டியிருந்தன. குறித்த இரண்டு நிதியாண்டுகளிலும் இக்கம்பனிகளிலிருந்து நிதியத்திற்கு எவ்வித வருமானமும் கிடைத்திருக்கவில்லை.

(எ) நிதியம் எரிவாயுக் கம்பனியொன்றின் வாக்குரிமையுள்ள பங்குகளில் 17.28 சதவீதம் மற்றும் வாக்குரிமை அற்ற பங்குகளில் 34.70 சதவீதம் என்ற வகையில் முறையே ரூபா 2,684,119,949 மற்றும் ரூபா 706,343,975 தொகையினை முதலீடு செய்திருந்தது. 2011 திசெம்பர் மாதத்தில் வெளியிடப்பட்ட முதலீட்டுக் கொள்கை அறிவித்தலின் 2.5 (இ) பிரிவின் பிரகாரம் எந்தவொரு கம்பனியினதும் முதலீட்டினது எதிர்பார்ப்பு நலனை அதிகரிப்பதாகும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இந்த முதலீட்டிற்குக் கிடைத்திருந்த வருமானம் 3.36 சதவீதமாகும். 2013 மார்ச் 31 ஆந் திகதியளவில் நிதியம் இக் கம்பனியின் வாக்குரிமையுள்ள பங்குகளின்

உரிமைத்துவத்தில் முதலாம் இடத்தினை கைப்பற்றியிருந்தது. 2013 திசெம்பர் 16 ஆந் திகதியிலுள்ளவாறு பங்குச் சந்தையில் இக் கம்பனியின் வாக்குரிமையுள்ள பங்குகளின் பெறுமதி ரூபா 1,063,963,496 இனாலும், வாக்குரிமையற்ற பங்குகளின் பெறுமதி ரூபா 328,152,141 இனாலும் குறைவடைந்திருந்தன.

*நீண்டகால நலனை எதிர்பார்த்து மேற்கொள்ளப்பட்ட இந்த இலாபமீட்டும் கம்பனியின் முதலீடு பங்குச் சந்தையில் அதிகரித்துச் செல்கையில் அதனுடன் இணைந்து முதலீட்டின் பெறுமதியும் நாளடைவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை மத்திய வங்கி கருதுகிறது.*

(ஏ) ஓராண்டிற்கு குறைவான காலத்தில் பங்குச் சந்தை கொடுக்கல்வாங்கல்களிற்குப் பயன்படுத்திக் கொள்வதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த வியாபாரத் தொகுதியினுள் உள்ளடங்கியிருந்த 37 கம்பனிகளின் ரூபா 773,665,828 கிரயமான பங்குகளின் விலைகள் தொடர்ச்சியாக பங்குச் சந்தையில் வீழ்ச்சியடைந்திருந்தமையால் வியாபாரத் தொகுதியிலிருந்து எதிர்பார்த்த நோக்கத்தினை அடைந்து கொள்ள முடியாமையால் 2012 திசெம்பர் 06 ஆந் திகதி 25 கம்பனிகளின் ரூபா 585,216,158 கிரயங் கொண்ட 28,915,417 பங்குகள் முதலீட்டுத் தொகுதிக்கு மாற்றப்பட்டிருந்தது. இத்திகதியில் இந்த 37 கம்னிகளுக்குமுரிய பங்குகளின் தேறிய சந்தைப்பெறுமதிக் குறைவு ரூபா 240,122,387 அல்லது கிரயத்தில் 31 சதவீதமாகும்.

(ஐ) ஹோட்டேல் துறையில் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீடு 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் இறுதியில் முறையே ரூபா 3,882,771,148 ரூபா 7,219,711,549 மற்றும் ரூபா 7,746,506,674 என அதிகரித்திருந்த போதிலும், அந்த ஆண்டுகளில் கிடைத்திருந்த வருமானம் ரூபா 56,511,978 ரூபா 146,632,975 மற்றும் ரூபா 146,122,343 ஆக காணப்பட்டன. இந்த முதலீட்டுக்குக் கிடைத்திருந்த வருமானம் 2010 இல் 1.46 சதவீதமாகவும் 2011 இல் 2.03 சதவீதமாகவும் 2012 இல் 1.89 சதவீதமாகவும் இருந்தன.

இலங்கைக்கு 2.5 மில்லியன் உல்லாசப் பிரயாணிகளை அழைத்துவரும் நோக்குடன் இத்துறையின் முதலீடு நீண்ட காலத்தில் மிகவும் இலாபகரமானது என்றும் இத்துறையின் திருப்பிச் செலுத்தும் காலஎல்லை நீண்டதாக உள்ளதால் நலனும் நிண்டகாலத்திற்கானது என்றும் இலங்கை மத்திய வங்கி கருதுகின்றது.

(ஒ) 2012 ஆம் ஆண்டில் நிதியம் ரூபா 5,018,155,587 இனை செலவழித்து 47 கம்பனிகளில் பங்குகளைக் கொள்வனவு செய்திருந்தது. அந்த முதலீடு நட்டமடைந்திருந்த, வருமானம் கிடைத்திருக்காத மற்றும் பங்கு விலைகள்

வீழ்ச்சியடைந்திருந்த 3 கம்பனிகளின் ரூபா 141,140,617 தொகை, வருமானம் கிடைத்திருக்காத மற்றும் பங்கு விலைகள் வீழ்ச்சியடைந்திருந்த 4 கம்பனிகளின் ரூபா 588,329,845 தொகை, பங்கு விலைகள் வீழ்ச்சியடைந்திருந்த 15 கம்பனிகளின் ரூபா 2,719,273,541 தொகை என்ற வகையில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளை உள்ளடக்கியிருந்தது.

*பங்குச் சந்தை விலைகள் வீழ்ச்சியடைகையில் முதலீட்டை அதிகரித்து நிறையளித்த சராசரி விலைகளை குறைத்துக்கொள்ளல் சாதாரண தந்துரோபயமாகும் என்பதும் பங்குகளில் முதலீடு செய்கையில் அடிப்படை விடயங்களைக் கருத்திற்கொண்டு முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் விலைகள் மாற்றமடையும் எதிர்வுகூறல்கள் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதும் இலங்கை மத்திய வங்கியின் கருத்தாகும்.*

(ஓ) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் பங்குச் சந்தை கொடுக்கல் வாங்கல்களிலிருந்து மூலதன இலாபமாக நிதியத்திற்கு முறையே ரூபா 714,995,491 ரூபா 1,020,279,860 மற்றும் 102,895,132 கிடைத்திருந்ததுடன் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டில் இந்த வருமானத்தின் குறைவு 89.92 சதவீதமாகும். 2012 ஆம் ஆண்டில் பங்குச் சந்தையில் பங்குகளின் விலைகளில் ஏற்பட்ட துரித வீழ்ச்சி இதற்கான காரணமாகும்.

## 3.2 பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களிற்கு புதிய அடையாள அட்டைகளை வழங்குதல் மற்றும் மீளப் பதிவுசெய்தல் செயற்திட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டில் ரூபா 2,391,800 செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த 5 கியோஸ் இயந்திரங்கள் 2013 யூன் 30 ஆந் திகதி வரை குறித்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பயன்படுத்திக் கொண்டிருக்கவில்லை.

(ஆ) மேற்குறிப்பிட்ட புதிய அடையாள அட்டைகளை விநியோகிக்கும் கணனிச் செயற்பாடுகளிற்காக 15,000 மெமரி சிப்கள் ரூபா 10,965,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2013 யூன் 30 ஆந் திகதி வரை இந்த மெமரி சிப்கள் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

## 3.3 ஆளணி நிர்வாகம்

தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதியத்தில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிலவும் கீழே குறிப்பிடப்பட்ட 88 வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2014 மார்ச் மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| நிறைவேற்றுதரம் | 30 | 15 | 15 |
| நிறைவேற்றுதரம் அல்லாத தரம் | 188 | 124 | 64 |
| கனிஷ்ட தரம் | 42 | 33 | 09 |
| மொத்தம் | 260 | 172 | 88 |

## 4. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

நிதியத்தைச் செயலில் ஈடுபடுத்துவதற்கான உள்ளகக் கணக்காய்வு தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன், ஆளணி பற்றாக்குறை காரணமாக நிதியத்தின் வரையறைக்குட்பட்ட பகுதிகள் மாத்திரமே கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

நிதியத்தின் நிதி நிர்வாகத்திற்குரிய உள்ளகக் கணக்காய்வு இலங்கை மத்திய வங்கியினால் தனியார் கணக்காய்வு நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அக் கணக்காய்வினால் நிதியத்தின் முக்கிய சில துறைகள் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2012 ஆம் ஆண்டில் இந்த தனியார் கணக்காய்வு நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்ட கணக்காய்வுக் கட்டணம் அண்ணளவாக ரூபா 6,494,880 ஆகும்.

## 4.2 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான அவதானிப்புகள்

2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை தீர்த்து வைக்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறிப்பிட்டதொரு தொழில் வழங்கும் நிறுவனம் தனது ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பியிருந்த ரூபா 3,608,667 உதவு தொகைகள் போலியான ''சீ'' அறிக்கையின் மூலம் தனது உறவினரின் தனிப்பட்ட கணக்கில் செலவு வைத்திருந்த தொழில் உத்தியோகத்தரிடமிருந்து குறித்த தொகை சட்ட ரீதியாக அறவிடப்பட்டிருந்த போதும், அவருக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. (2006-2.5(அ))

(ஆ) 1995 – 2003 வரையான காலப்பகுதியின்போது முடிவடைந்த வழக்குகளில் கண்டி நீதவான் நீதிமன்றத்தால் அறவிடப்பட்ட ரூபா 16,803,661 உதவு தொகையும் தண்டப் பணமும் நீதவான் நீதிமன்றத்திலிருந்து 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை பெறப்படவில்லை. (2006 – 2.5 ஆ))

*04 வழக்குகளுக்குரிய தொகைகளை நீதிமன்றத்திடமிருந்து வரவழைத்து பொருத்தமான விதத்தில் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் எஞ்சிய வழக்குகளிற்குரிய தொகைகளை வரவழைத்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தொழில் ஆணையாளர் நாயகம் அறிவித்திருந்த போதிலும், பணங்கள் அறவிடப்பட்டமை தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.*

(இ) 1994 ஜனவரி 31 அன்று ஒரு கம்பனியாகப் பதிவு செய்யப்பட்டு 1997 ஏப்ரல் 01 ஆந் திகதியன்று வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்த நிதிக் கம்பனி ஒன்று 1997 திசெம்பர் 03 ஆந் திகதியன்று ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்திருந்தது. அக்கம்பனி ஊழியர் சேமலாப நிதி உதவு தொகை மற்றும் தண்டப் பணம் ரூபா 48,461,705 இனை நிலுவையாகக் கொண்டிருக்கையில் அது கலைக்கப்பட்டிருந்தது. 2014 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலும் இத் தொகையை அறவிடுவதற்கு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு முடியாது போயிற்று. (2008 – 2.2.6 (உ) I)

(ஈ) 2005 முதல் 2008 வரையான காலப் பகுதியின்போது ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்களது உதவு தொகை மற்றும் தண்டப்பணமாக வழக்குகளின் மூலம் அறவிடப்பட்ட ரூபா 62,571,668 தொகைக்குரிய அங்கத்தவர்களது சரியான தகவல்கள் ஊழியர் சேமலாப நிதியத்தில் இல்லாமையால் அத் தொகையை அவர்களது தனிப்பட்ட கணக்குகளில் செலவு வைக்காது அரசிறையில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இக்கணக்குகளைத் தீர்த்துவைப்பதற்கு 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. (2010 – 2.2.1 (அ) I)

(உ) மத்திய கொழும்பு மாவட்ட தொழில் அலுவலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட நிறுவனங்களிலிருந்து உதவு தொகை மற்றும் தண்டப் பணம் என்பவற்றை அறவிடுவதற்காக வழக்குகள் தொடரப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை, வழக்குகள் தொடரப்பட்ட போதும் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படாமை, தவணை முறையில் கொடுப்பனவுகளைச் செலுத்தும் வசதி வழங்கப்பட்ட போதும் அவ்வாறு செலுத்தாது புறக்கணித்தமை, நிறுவனங்கள் கலைக்கப்படுவதற்கு முன்னர் ஊழியர் சேமலாப நிதியத் தொகைகள் அறவிடப்பட்டிருக்காமை, ஊழியர் சேமலாப நிதியத்தின் தொங்கற் கணக்கில் உள்ள வைப்புகளை சரியான “சீ” அறிக்கைகளைப் வழங்கித் தீர்த்துவைக்காமை, 2003 – 2006 காலப் பகுதியின்போது பெறப்பட்ட உதவு தொகை மற்றும் தண்டப் பணம் என்பவற்றை குறித்த அங்கத்தவர்களது கணக்குகளில் செலவு வைக்காமை மற்றும் தாமத தண்டப்பணத் தொகையை அறவிடாமை போன்ற ரூபா 313,452,501 சம்பந்தமாக அறிவிக்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் அவ்விடயங்களை உள்ளடக்கிய 2009 இன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கையின் 3.2.5 பந்தியின் (ஈ) மற்றும் 2010 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கையின் 3.2.1 (இ) (iii) மற்றும் 2011 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையின் 5.4 (உ) பிரிவுகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைப் புலனாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தபோதும், அவை தொடர்பாக 2014 ஏப்ரல் 30 வரை பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தொழில் ஆணையாளர் நாயகத்திற்கும் இலங்கை மத்திய

வங்கியின் ஆளுனருக்கும் அறிவிக்கப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

**5.1 இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு**

(அ) முதலீடுகள்

(ஆ) செயற்பாட்டு நடவடிக்கைகளை வெளி நபர்களிடம் ஒப்படைத்தல்

**5.2 தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு**

(அ) கணக்கீடு

(ஆ) கணக்காய்வு நியமங்களைக் கடைப்பிடித்தல்

(இ) உதவு தொகையையும் தண்டப் பணத்தையும் அறவிடுதல்

(ஈ) நிலையான சொத்துக்கள்

(உ) தொழில் வழங்கும் நிறுவனங்களைப் பரிசீலித்தல்